[2014 ஜூலை 21

197—

தொழில் பூங்கா

*7115—**திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதியில் சிப்காட் தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர் மற்றும் சாத்தூர் வட்டங்கள் அடங்கிய துலுக்கப்பட்டி, இ. குமாரலிங்கபுரம், இ. முத்துலிங்கபுரம் மற்றும் மேட்டமலை ஆகிய கிராமங்களில் 3,460 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிற்பூங்கா ஒன்றை ஏற்படுத்திட சிப்காட் நிறுவனம் தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேற்படி தொழில் பூங்கா ராஜபாளையம் தொகுதி முழுவதற்குமான தொழில் தேவையை நிவர்த்தி செய்வதாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். தென் தமிழகத்திலே மிகப் பெரிய தொழில் நகரம் ராஜபாளையம் ஆகும். இங்கு இருநூறுக்கும் மேற்பட்ட நூற்பாலைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவத் துணிகள்* (bandage clothes) *தயாரிக்கின்ற தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. புதிதாகத் தொழில் துவங்க ஆர்வமாக உள்ள தொழில் முனைவோர்களுக்கு வரும் காலங்களில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு, அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜூலை 21]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொல்லிய அந்தப் பகுதி ராஜபாளையம் பகுதியிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலேதான் இருக்கும். அங்கே கிட்டத்தட்ட 3,460 ஏக்கர் நிலப் பரப்பிலே ஒரு சிப்காட் வளாகம் அமைக்கவிருக்கின்ற காரணத்தினால், ராஜபாளையத்திலே எந்தெந்தத் தொழில்கள் இருக்கின்றதோ, அந்தத் தொழில்கள் எல்லாம் அங்கே அமைவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி மாவட்டம் இதுவரை எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாத மாவட்டம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சிப்காட் வளாகம் அமைப்பதற்காக விவசாயிகளின் நிலம் பாதிக்காத அளவுக்கு நிலமும் கையகப்படுத்தப்படுவதாக அறிகிறேன். அது போன்று எப்போது தருமபுரியிலே சிப்காட் வளாகம் அமைக்கப்படும், அந்தத் தொழிற்பூங்கா தருமபுரி மாவட்டத்து மக்களுக்கும் பூக்குமா, எப்போது துவங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் ஒரு சிப்காட் வளாகம் அமைக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஏற்கெனவே நாங்கள் ஒரு பகுதியைக் கண்டறிந்தோம். அந்தப் பகுதியில் பல்வேறு அரசியல் கட்சிகளும் விவசாயிகளும் பிரச்சினை செய்த காரணத்தினால் அதை விட்டு விட்டு இப்போது வேறு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. கூடியவிரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கே சிப்காட் வளாகம் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*